**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No. 561/2022**
**Deposition of Witness for the Plaintiff – PW2**
**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of 06/2025**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **ரமேஷ்** | **Caste:** | |
| **Father Name** | **கணேஷ்** | **தொழில்** | எலக்ட்ரிக் வேலை |
| **Village:** | **மண்மங்கலம்** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 42 |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் மூன்றாம் தரப்பினர் ஆவேன். நான் வாதிக்கு ஆதரவாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 04.12.2017ம் தேதியன்று பிரதிவாதி சந்திரசேகரன் வாதிக்கு தாவா சொத்தை விற்பனை செய்வதாக ஒப்புக்கொண்டு ஒரு பதிவு செய்யப்படாத கிரய உடன்படிக்கை ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்தார். அவ்வாறு பதிவு கிரய உடன்படிக்கை ஆவணத்தை ஏற்படுத்திய போது, பிரதிவாதி வாதியிடம் இருந்து கிரய முன்தொகையாக ரூ.5,00,000/–த்தை பெற்றுக்கொண்டார். பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத கிரய உடன்படிக்கை என் முன்னிலையில் தான் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. அந்த பதிவு கிரய உடன்படிக்கையில் நான் ஒரு சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.2 பதிவு செய்யப்படாத கிரய உடன்படிக்கை ஆவணத்தில் பக்கம் 4–ல் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

வாதிக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர். கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டடச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.